# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 30.01.2024 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குப்பைகளை சேகரம் செய்யும் பணியை ஜெயசூர்யா இண்டஸ்டிரிஸ், திருப்பூர் என்ற நிறுவனம் பணி மேற்கொண்டது. அப்பொழுது நகராட்சி வாகனம் எண் 1. TN40 S4549, 2.TN40 S9852, 3. TN40 S 4582 ஆகிய LCV வாகனங்களை தினசரி வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது அவரது பணிகள் சரியில்லை என்பதால் நகர்மன்ற தீர்மானத்தின்படி 15/11/2023ல் இரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட வாகனத்தை ஒப்படைக்கின்ற பொழுது அதில் RTO யிடமிருந்து தகுதிச்சான்று பெறாமல் வாகனத்தை திரும்ப பெற இயலாது. எனவே மேற்கண்ட வாகனத்தை பழுது பணிகள் செய்து, தகுதிச்சான்று பெற வேண்டி உள்ளது. கீழ்க்கண்டவாறு வாகனத்திற்கு செலவினம் ஏற்படும்.<br>1. TN40- S4549- ரூ.62,000/-<br>2 .TN40- S9852- ரூ.56,300/-<br>3. TN40- S4582 - ரூ.61,300/-<br>மேலும் இவ்வாகனத்திற்கு காப்பீடு மற்றும் தகுதிச் சான்று பெற ஆகுகின்ற செலவினத்தை சம்பந்தப்பட்ட ஜெய சூர்யா இண்டஸ்ட்ரிஸ், திருப்பூர் நிறுவனத்தின் பில்லில் பிடித்தம் செய்யவும், பழுது பணிகளை சரி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5103/2023/எச் 1<br><br>**தீர்மானம் எண் :1**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 2 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40F 2273 (Septic Tanker Lorry) வாகனத்தின் பேட்டரி பழுது ஏற்பட்டுள்ளதால், புதிய பேட்டரி (12Voltage Battery 100AH)ஒன்று வாங்கி பொருத்த ஆகும் தோராய செலவினம் ரூ.10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**தீர்மானம் எண் : 2**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

3 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்கள் கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியினை எஸ்.ஆர்.இஞ்சினியரிங் மேட்டுப்பாளையம் என்ற நிறுவனத்திற்கு 25.10.2023 முதல் 18.01.2024 வரை 89 நாட்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. மீண்டும் அதே பணியினை மேற்கண்ட நிறுவனத்திற்கே அதே விலைப்புள்ளி விகிதத்திலேயே 19.01.2024 முதல் 13.04.2024 வரை 89 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான EPF&ESI சேர்த்து தோராய செலவினம் ரூ. 76205x68x89 = ரூ.4800000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 2530/22/எச் 1

**தீர்மானம் எண் : 3**

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4 மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு செல்லும் பாதை சுற்றுலாதலத்திற்கு செல்லும் பாதை என்பதால் முக்கிய பிரமுகர்கள், சுற்றுலா பயணிகள் செல்கின்றார்கள். மேலும் 33 வார்டுகளில் செடிகள், புற்கள், வளர்ந்து அதனை பணியாளர்கள் கொண்டு சுத்தம் செய்ய சுகாதாரப்பிரிவிற்கு தலா ஒன்று வீதம் 4 (நான்கு) எண்ணிக்கை (சிறிய அளவு) புற்கள் வெட்டும் இயந்திரங்கள் வாங்க 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தத் தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | திருவாளர் சித்தார்த் அஸோசியேட்ஸ், கோயமுத்தூர். | ரூ.99,500/- |
| 2 | திருவாளர் எஸ்.எஸ். அஸோசியேட்ஸ், மதுரை | ரூ.99,900/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.சித்தார்த் அஸோசியேட்ஸ், கோயமுத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் : 4**

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5 மேட்டுப்பாளையம் நகராட்சி 33 வார்டுகளில் புதியதாக 125 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்க 18.04 லட்டும் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 18.04 லட்சம் தொகையில் மின்வாரியத்திற்கு தொகை செலுத்த ரூ.6,52,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை 120 விளக்குகளுக்கு மின்வாரிய மதிப்பீட்டுத் தொகை ரூ.13,29,320/- செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம் என நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| | திட்ட ஒதுக்கீடு விட கூடுதலாக மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்ட ரூபாய் 6,77,320/- தொகைக்கு டிசம்பர்-2023 மாதத்தில் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள 5 விளக்குகள் (வார்டு 8 சத்தியமூர்த்தி நகர் நம்பி கார்டன்) பணி தேக்கம்பட்டி மின்வாரிய அலுவலகத்தை சார்ந்ததாகும். மேற்படி 5 விளக்குகளுக்கு வரப்பெற்ற கேட்பு அறிக்கையின்படி ரூ.19,420/-யினை 15 தினங்களுக்குள் செலுத்தும் படி மின்வாரியத்தால் கோரப்பட்டதால் மேற்கண்ட தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து மின் வாரியத்திற்கு தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்<br><br>ந.க.எண் : 959/2021/இ1<br>**தீர்மானம் எண் : 5**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெனரேட்டர் பராமரிப்பு பணி கடந்த 12.11.2020 ந் தேதி செய்யப்பட்டது. தற்போது ஜெனரேட்டர் வித்தியாசமான சப்தத்துடன் இயங்குகிறது. எனவே ஜெனரேட்டரில் ஆயில், ஏர்பில்டர், ஆயில் பில்டர், ரேடியேட்டர். குளிர்விக்கும் ஆயில் ஆகியவைகளை மாற்றுதல், மற்றும் டிசல் டேங்க் கிளீனிங் பேட்டரி சர்விஸ் செய்தல் போன்ற பணிகளை செய்ய ஆகும் உத்தேச செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ரூ. 75,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் : 2527/2019/இ1<br>**தீர்மானம் எண் : 6**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குப்பட்ட அண்ணாஜிராவ்ரோடு சாலையில் உள்ள தினசரி சந்தை மற்றும் சிதிலமடைந்த பழைய இறைச்சி கடைகளை இடித்து புதிய தினசரி சந்தை மற்றும் இறைச்சி கடைகள் கட்ட அரசு ஆணை எண் Go (4D) No : 39 நாள் : 14.9.2023 -யில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் தற்போது இயங்கி வரும் கடைகளை காலி செய்ய குத்தகைதாரர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குத்தகைகாரர்களுக்கு இவ்விடத்திற்கு அருகில் உள்ள கண்ணப்பன் லே அவுட் சாலையில் ஓரத்தில் தற்காலிக கடைகளை செட் அமைத்து தர கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, கண்ணப்பன் லே அவுட் சாலையில் ஓரத்தில் தற்காலிக கடைகளுக்கான செட் (கூரை)(Shed) அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண் : 7**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 நம்பி கார்டன் பகுதியில் குடிநீர் இணைப்பு வேண்டி **மக்களுடன் முதல்வர்** சிறப்பு முகாமில் பல விண்ணப்பங்கள் வரப்பெற்று உள்ளன. ஆனால் இப்பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமையப்பெறவில்லை. மேலும். இப்பகுதிக்கு மண்சாலை தார்சாலையாக அமைக்க வேண்டி தமிழக அரசுக்கு திட்ட அறிக்கை கடந்த 26.12.2023 யில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே , சாலை அமைக்கும் முன் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இப்பகுதிக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.70 இலட்சத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண்** : 8<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட, நடூர் நகராட்சிப் பள்ளியில் கட்டிட பழைய பழுதடைந்த ஓட்டுக் கட்டிட வகுப்பறைகளை அகற்றிவிட்டு புதிய நான்கு வகுப்பறைகள் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது. மேற்படி இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தில் தற்போது இரண்டு வகுப்பறைகள் நடைபெற்று வருகிறது. புதிய வகுப்பறைகள் கட்டப்படும் வரை மாணவர்களுக்கு அருகில் உள்ள கட்டிடத்தின் மேல் தளத்தில் Galvanise sheet கொண்டு வகுப்பறைகள் கட்டப்பட வேண்டியுள்ளது. புதிய வகுப்பறைகள் கட்டியபின் இக்கட்டிடத்தை பள்ளியின் smart class room ஆக பயன்படுத்தி கொள்ளலாம். எனவே, இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 6.00 இலட்சத்திற்கு அனுமதியும் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண்** : 9<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலகம் பின்புறம் சிதிலமடைந்த பழைய மீன் சந்தை கட்டிடத்தை இடித்து புதிய மீன் சந்தை கட்டிடம் கட்ட அரசாணை எண் GO (4D) No 39 நாள் 14.09.2023 நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் தற்பொழுது இயங்கி வரும் கடைகளை காலி செய்ய குத்தகைதாரர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குத்தகைதாரர்கள் இடிக்கப்படும் கட்டிடத்தின் முன்புறம் தற்பொழுது உபயோகம் இல்லாமல் காலியாக உள்ள 10 கடைகளில் (மேற்படி புதிய கட்டிடம் கட்டி பயன்படுத்தும் வரை) அவர்களது கடைகளை அமைத்துக் கொள்ள கோரிக்கை வைத்துள்ளனர்.<br>எனவே மேற்படி கடைகளை தற்போது மராமத்து மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொண்டு இடிக்கப்படும் கடை குத்தகைதாரர்களுக்கு தற்போது உபயோகிக்க அனுமதி வழங்கப்பட்டு பின் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின் தற்போது பழுது பார்க்கும் கடைகளையும் பொது ஏலம் மூலம் பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம். எனவே, மீன் சந்தை கட்டிடத்திற்கு முன்புறம் தற்போது பயன்பாட்டில் உள்ள மீன் சந்தை கட்டிடத்திற்கு முன்புறம் தற்போது பயன்படாமல் உள்ள 10 கடைகளை மராமத்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 5.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண்** : 10<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழ மானியம் 2023-2024 ஆம் நிதி ஆண்டிற்கான Tied Grant ஒதுக்கீட்டின் கீழ் புதிய 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி கொள்முதல் செய்ய ரூ.18.50 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்16493/2023/EA.2 நாள் 22.11-2023யின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி வாகனம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து வாகனத்தின் பதிவுக்கட்டணம், சாலைவரி மற்றும் Insurance கட்டணம் ஆகியவை மேற்கொள்ள ரூ0.50 இலட்சத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண் : 11**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால், இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 668, நாள் 31.08.2023 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர். M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் இந்நகர்மன்ற தீர்மானம் 712, நாள் 31.10.2023ன் படி 28.01.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திருவாளர்.M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் 29.01.2024 முதல் 27.04.2024 வரை 89 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.14.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**தீர்மானம் எண் : 12**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் அவர்கள் கடந்த 22.12.2023 முதல் 26.12.2023 வரை கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்தபோது அவரது ஆய்வுப் பயணத்திற்கு "Noiel Travels" என்னும் தனியார் நிறுவனம் மூலம் வாடகை கார் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. எனவே, மேற்படி தனியார் நிறுவனம் மூலம் வாடகை வாகனம் பயன்படுத்தியமைக்கான கார் வாடகைத்தொகை ரூ32420/-(ரூபாய் முப்பத்தியிரண்டாயிரத்து நானூற்றி இருபது மட்டும்) மேட்டுப்பாளையம் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட கோவை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறைகளில் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.32420/- (ரூபாய் முப்பத்தியிரண்டாயிரத்து நானூற்றி இருபது மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண் : 13**<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |